பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 640 **நாள்: 01.11.2026**

மாண்புமி மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், வளசரவாக்கம் மண்டலத்தில் ரூபாய் 5.35 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பூங்கா, நகர்ப்புற நல வாழ்வு மையம், வார்டு அலுவலகக் கட்டடம், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் இரண்டாம் தளக் கட்டடம் உள்ளிட்டவற்றை மக்கள் பயன்பாட்டிற்கு இன்று திறந்து வைத்தார்.

மாண்புமி மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், வளசரவாக்கம் மண்டலத்தில் மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் ரூபாய் 5.35 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பூங்கா, நகர்ப்புற நல வாழ்வு மையம், வார்டு அலுவலகக் கட்டடம், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் இரண்டாம் தளக் கட்டடம் உள்ளிட்டவற்றை மக்கள் பயன்பாட்டிற்கு இன்று (01.11.2026) திறந்து வைத்தார்.

மாண்புமிகு மேயர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம் மண்டலம், வார்டு-145க்குட்பட்ட நெற்குன்றம், மாதா கோவில் தெருவில் ரூபாய் 1.95 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பூங்காவினை மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்துப் பார்வையிட்டார். பின்னர், அப்பகுதியில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நகர்ப்புற நலவாழ்வு மையம் கட்டடத்தினைத் திறந்து வைத்தார்.

இப்பூங்காவில் திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம், டென்னிஸ் கோர்ட், யோகா செய்யும் இடம், மினி அரங்கம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் 3,821 சதுர மீட்டர் பரப்பளவில் ரூபாய் 1.95 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, சக்தி நகர் பிரதான சாலையில் ரூபாய் 2.05 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 153ஆவது வார்டு அலுவலகக் கட்டடத்தினைத் திறந்து வைத்தார். இந்த வார்டு அலுவலகம் கட்டடமானது 422 சதுர மீட்டர் பரப்பளவில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

பின்னர், அப்பகுதியில் ரூபாய் 1.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தின் இரண்டாம் தளக் கட்டடத்தினைத் திறந்து வைத்தார். இந்த நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தின் இரண்டாம் தளக் கட்டடமானது 158 சதுர மீட்டர் பரப்பளவில் மின் தூக்கி மற்றும் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சிகளில் தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு. அ.தாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், மண்டலக்குழுத் தலைவர் திரு. நொளம்பூர் வே. ராஜன், மாமன்ற உறுப்பினர்கள் திரு.த.சத்தியநாதன், திருமதி சாந்தி இராமலிங்கம், திரு.ஏ.ஸ்டாலின், திருமதி ச.பாரதி, மண்டல அலுவலர் (பொ) திரு.என்.தட்சணாமூர்த்தி, செயற்பொறியாளர் திரு.ஜி.சண்முகம் மற்றும் அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.